பிறப்பித்திருப்பதாக அறிந்தோம். ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களை வேறு எந்தப் பணிக்கும் அனுப்பப்படக்கூடாதென்று நாங்கள் கருதுகிறோம். எனவே ஆசிரியர்களை, ஆசிரியர் பணியிலேயே ஈடுபடுத்த அரசு தக்க ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இவைகள் எல்லாமே தாற்காலிகமான ஏற்பாடுகளாகத்தான் இருக்கும்.

Omni Bus Owners.

* 25 *Q.*—THIRU K. S. MANI (on behalf of **THIRU V. THANGAPANDIAN**): Will the Hon. the Minister for **Transport** be pleased to state—

(*a*) whether the Government have received any complaints stating that the owners of omni buses are misusing their permits: and

(*b*) if so, whether the Government have proposed to cancel the permits issued to them ?

ஆம்னி பஸ் உரிமையாளர்கள்.

திரு. கோ. சி. மணி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆம்னி பஸ் உரிமையாளர்கள் (Omni Bus Owners) **தங்களின்** அனுமதிகளை தவறுதலாகப் பயன்படுத்துவதாக அரசிற்கு **புகார் ஏதும்** வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அவர்களுக்கு வழங்கியுள்ள அனுமதிகளை **ரத்து** செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(இ) அனுமதிச் சீட்டை வைத்திருப்போர் மீது நிபந்தனையை மீறியதற்காக, மோட்டார் வாகன சட்டம் 60-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பிற மாநிலங்களைச் சேர்ந்த பேருந்து இயக்குபவர்களுக்குச் சொந்தமான ஆம்னி பேருந்துகளுக்கு எதிராகப் பெறப்பட்ட முறை

[1978 செப்டம்பர் 2

யிடுகளைப் பொறுத்தமட்டில், அனுமதியை வைத்திருப்போர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அவர்களுக்கு அனுமதி வழங்கிய சம்பந்தப்பட்ட தொடக்கநிலைப் போக்குவரத்து அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டு வருகின்றனர்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : சில குறிப்பிட்ட ஆம்னி பஸ்கள் சிறப்பான முறையில் சேவை செய்வதால், பொது மக்கள் அவர்களாகவே அந்த பஸ் களில் பிரயாணம் செய்ய விரும்பிச் செல்வது அரசுக்குத் தெரியுமா? எனவே, அதுபோன்ற ஆம்னி பஸ்களின் உரிமையாளர்களை ஊக்குவிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்னிபஸ் என்பவற்றுக்கு, ஒப் பந்தப் பேருந்துகளாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குறிப்பிட்ட ஒரு பிரிவினரை எடுத்துச் செல்லவும், சுற்றுலாப் பேருந்துகளாக உல்லாசப் பயணிகளை ஏற்றிச் செல்லவும் அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் அந்த பஸ்களைத் தவறாகப் பயன்படுத்துவதாக அறிந்து, கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : ஆம்னிபஸ் சர்விசை நடத்துபவர்கள் அரசு விரைவுப் பேருந்துகளுக்குப் போட்டியாக, அதைவிட மிஞ்சி விடுகிற நிலைமை யில் நடத்துகிறார்கள். அவர்களுக்கு வருமானம் நிறையக் கிடைக்கிறது. நாகர்கோவில், சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்களிலெல்லாம் அவர்கள் அலுவலகம் வைத்துக்கொண்டு சிறப்பாக அந்த சர்விஸ்களை நடத்துவது அரசின் கவனத்திற்கு வந்ததா? அதைத் தடுத்து நிறுத்தினால், அரசுப் பேருந்துகளுக்கு அதிக வருமானம் வரும் வாய்ப்பு இருக்கிறதென்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறியது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஆனால் இப்போதைய அரசு அமைக்கப்பட்ட பிறகு, புதிதாக எந்த ஆம்னி பஸ்ஸுக்கும் அனுமதி தரவில்லை. ஆனால் அது சம்பந்தமாக உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அந்த வழக்கிலே ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்குப் பயணிகளை எடுத்துச் செல்வது செல்லுமென்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். எனவே சட்டச் சிக்கல்களும் இதில் இருக் கின்றன. எந்த முறையில் இந்தக் குறைபாடுகளைக் களைவது என்பதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நீதி மன்றத்தில் வழங்கிய தீர்ப்பை அமைச்சரவர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் நீதி மன்றம் ஒரு தீர்ப்பைக் கொடுத்துவிட்டதாலேயே, எல்லா ஆம்னி பஸ் நடத்துபவர்களும் செய்யும்

அநியாயங்கள் நியாயமென்று சொல்ல முடியாது. இப்போது ஓட்டுகிற ஆம்னிபஸ்களுக்கு ஷெட்யூல்ட் டைம் போட்டு—9½ மணிக்கு இந்த ஊருக்கு பஸ்; 10 மணிக்கு பங்களூருக்கு பஸ்; 10½ மணிக்கு கோயம்புத்தூருக்கு பஸ்—ரெகுலராக விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுத்து, அரசுப் போக்குவரத்திற்கு வருமானத்தைப் பெருக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதைவிட, அவைகளைப் பறிமுதல் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அந்தப் பேருந்துகளைப் பறிமுதல் செய்ய சட்டத்தில் இடமில்லை. அதனால்தான் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள். சட்ட ரீதியாக அந்தப் பேருந்து களை நாட்டுடைமையாக்கலாமா என்பதுபற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி: நம்முடைய விரைவுப் பேருந்துகளுக்குப் போட்டியாக ஆம்னிபஸ் இயங்கி வருகிறதென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையிலும், அது கொள்கை அடிப்படையிலே தவறு என்று ஒப்புக்கொள்ளப் பட்ட நிலையிலும், ஆம்னிபஸ் சொந்தக்காரர்கள் தவறுகள் இழைக்கின்ற போது அதை அடிப்படையாக வைத்து, ஏன் அதற்கான சலுகையை, உரிமையை ரத்து செய்யக்கூடாதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நான் ஏற்கனவே கூறினேன். ஒப் பந்தப் பேருந்துகளை, பயணப் பேருந்துகளாக ஓட்டுவதைக் கண்டுபிடித்து அரசு நடவடிக்கை எடுத்தபோது, அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, தடை உத்தரவு பெற்றார்கள். எனவே நாட்டுடைமையாக்கி விட்டால், இந்தப் பிரச்சினையைச் சரி செய்யலாமென்றும், அரசுப் பேருந்துக்கு ஏற்படும் நஷ்டத்தைக் குறைக்கலாமென்றும் அரசு தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருக் கிறது.

திரு. கோ. சி. மணி: உயர்நீதி மன்றத்திற்குப் போய், தீர்ப்பு வழங்கி பல ஆண்டுகள் ஆகின்றன. தீர்ப்பை ஒட்டி நடவடிக்கை எடுக்க முடிய வில்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த அரசு சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருக்கிறதா? அந்தப் பிரச்சினை யைத் தீர்ப்பதற்கு, தனியாக ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்காக ஏதாவது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறு கின்ற உயர்நீதி மன்றத் தீர்ப்பு மற்றொரு தீர்ப்பாகும். நாட்டுடைமை ஆக்கு வதற்காக 1974ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு

வந்த சட்டத்தை எதிர்த்து ஆம்னிபஸ் உரிமையாளர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்றதன் காரணமாக, உயர்நீதி மன்றம் அந்தச் சட்டம் செல்லாதென்று தீர்ப்பு அளித்திருக்கிறது. அதற்குப் பிறகும் அரசு நடவடிக்கை எடுத்து வந்தது. ஒப்பந்தப் பேருந்துகளைப் பயணப் பேருந்துகளாக ஓட்டியபோது, கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தபோது, அவர்கள் தனித் தனியாக நீதி மன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு பெற்று வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்திலுள்ள ஓட்டைகளை அடைத்து, நல்லதொரு சட்டத்தை நிறைவேற்ற அரசு பரிசிலித்து வருகிறது.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, supporting the views expressed by the hon. Member Thiru Venkatesan, I think these omni buses are very useful to serve the very necessary needs of the public. While so, will it not be possible to make the permits granted to them sufficiently elastic so that they may serve the needs of the public and, at the same time, not violate the terms of the permits?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தமிழ் நாட்டில் மொத்தம் 115 ஆம்னிபஸ்கள் இப்போது ஓடுகின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், ஆம்னிபஸ் சீட் ஒன்றுக்கு 280 ரூபாய் வரி விதிக்கப்படுகிறது. இதில் உள்ள சிக்கல் எல்லாம், அவர்கள் அண்டை மாநிலங்களில் உரிமம் பெற்று வந்துவிடுகிறார்கள். அங்கே சீட்டுக்கு 50 ரூபாய் வரி கொடுத்துவிட்டு, இங்கே பேருந்தை ஓட்டுகிறார்கள். அதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. தனித்தனியாக அவர்கள் இங்கே ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். ஆந்திர உயர்நீதி மன்றம் அது செல்லுமென்று தீர்ப்பு அளித்திருக்கிறது. தமிழக உயர்நீதி மன்றமும் செல்லுமென்று தீர்ப்பு அளித்திருக்கிறது. இதனால் தமிழகத்திற்கு வருவாய் குறையுமென்பதால், அந்தப் பேருந்துகளை நாட்டுடைமையாக்குவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. கோ. சி. மணி : பஸ்களைத் தேசியமயமாக்கும் திட்டத்தின் காரணமாகத் தொடரப்பட்ட வழக்கு ஒன்று ; ஆம்னிபஸ்கள் தவறாக நடக்கின்றன என்று ஒரு வழக்கு தொடரப்பட்டு, உயர்நீதி மன்றத்தில் பஸ் ஆபரேடர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு ஆகியிருக்கிறது இன்னொரு வழக்கில் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இந்த இரண்டையும் போட்டுக் குழப்பாமல், ஆம்னிபஸ்களில் ஏற்படும் ஒழுங்கீனங்களை மாற்றி, அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து, பஸ்களைப் பறிமுதல் செய்யத் தனியாக புதிய சட்டம் கொண்டுவரும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினசவர்கள் தான் குழப்பிக்கொண்டிருக்கிறுர்களென்று கருதுகிறேன். மன்னிக்க வேண்டும். ஒப்பந்தப் பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதுபற்றி ஒரு சட்டம் (தி.மு.க. ஆட்சியில்) கொண்டு வந்து அந்த டிராஃப்ட் ஸ்கீம் குறித்து உயர்நீதிமன்றத்திற்குப் போய், தடை உத்தரவு வாங்கி, அந்த வரைவுத் திட்டமே செல்லாதென்று தீர்ப்பு ஆகியிருக்கிறது.

Black Topping of Road from Senthamangalam to Karavalli.

* 26 Q.—THIRU A. BALASUBRAMANIAM : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) whether the Government are aware of a proposal to black top the road from Senthamangalam of Salem district to Karavalli (via) Ramanathapuram Pudur; from the Salem Co-operative Sugar Factory Cess Fund of Mohanoor;

(b) if so, when action will be taken in this regard; and

(c) the amount set apart for this scheme?

சேந்தமங்கலத்திலிருந்து காரவள்ளிக்கு தார்சாலை போடுதல்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை செஸ்நிதியிலிருந்து சேலம் மாவட்டத்தில் சேந்தமங்கலத்திலிருந்து காரவள்ளிக்கு இராமநாதபுரம் புதூர் வழியாக தார் சாலை போடுவது குறித்த செயற்குறிப்பு அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ?

(உ) அதற்காக ஒதுக்கீடு செய்துள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(இ) சர்க்கரைத்துறை இயக்குநரிடமிருந்து 1978-79ஆம் ஆண்டிற்கான சாலைப் பட்டியல் கிடைக்கப்பட்டவுடன் மேற்படி சாலைப் பணிகுறித்துத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(உ) மேற்படி சாலைப் பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.05 இலட்சம்.